**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# கைவினை தொழிலாளர்களுக்கு ரூ.15,000 கோடியில் திட்டம்

## செப்.17 இல் தொடக்கம்: பிரதமர் மோடி

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, ஆக.15:** நூற்றாண்டு காலமாக பாரம்பரிய திறன்களில் ஈடுபட்டுள்ள பல்வேறு வகையான கைவினை தொழிலாளர்களுக்கு 'பிரதமரின் விஸ்வகர்மா கௌஷல் சம்மான்' திட்டம் வரும் செப்டம்பர் 17-ஆம் தேதி தொடங்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

இந்தத் திட்டத்தின் மூலம் நெசவாளர்கள், பொற்கொல்லர்கள், கொல்லர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்தும் தொழிலாளர்கள், அவர்களது குடும்பத்தினர் பலன் அடைவர்; விவசாயிகளுக்கான நலத் திட்டமான பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி, சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் தற்சார்பு நிதித் திட்டம் போன்றவற்றின் வரிசையில் இந்தத் திட்டம் கொண்டுவரப்படுகிறது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

தில்லி செங்கோட்டையில் 77 -ஆவது சுதந்திர தினத்தையொட்டி தேசியக் கொடியை செவ்வாய்க்கிழமை ஏற்றி வைத்து பிரதமர் கூறியதாவது: இந்தியா முழுவதும் விஸ்வகர்மா ஜெயந்தி வரும் செப்டம்பர் 17 - ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. அதையொட்டி, விஸ்வகர்மா கௌஷல் சம்மான் திட்டம் தொடங்கப்படும்.



புது தில்லி செங்கோட்டை முகப்பிலிருந்து சுதந்திர தின உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி.

**வறுமையின் பிடியிலிருந்து...:** பாரம்பரிய கைவினைத் தொழில்களில் நிபுணத்துவம் பெற்ற தனிநபர்கள், குறிப்பாக இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலன் அடையும் வகையில், சுமார் ரூ.13,000 கோடி முதல் ரூ.15,000 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் விரைவில் (செப்.17) செயல்படுத்தப்படும். இது போன்ற பல திட்டங்களால் இந்தியாவில் 13.5 கோடி மக்கள் வறுமையின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். வாழ்க்கையில் இதைவிட பெரிய திருப்தி வேறு எதுவும் இருக்க முடியாது என்றார்.

பொதுவாக, விஸ்வகர்மா என்ற சமூகம் என்பது கொல்லர், பொற்கொல்லர், தச்சர், சிற்பி, கன்னார் (பாத்திர வேலை) என ஐந்து விதமான தொழில் செய்பவர்களாக கூறப்பட்டாலும், அனைத்து வகையான கைவினை தொழிலாளர்களும் உட்படுத்தப்பட்டு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**மத்திய நிதிநிலை அறிக்கையில்...:** கடந்த பிப்ரவரி 1-ஆம் தேதி நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சமர்ப்பித்த மத்திய நிதிநிலை அறிக்கையில் இந்தத் திட்டம் குறித்து குறிப்பிடப்பட்டிருந்தது. பொதுவாக, விஸ்வகர்மா என்று அழைக்கப்படும் பாரம்பரிய கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களால் உருவாக்கப்பட்ட கலை மற்றும் கைவினைப் பொருள்கள் இந்தியாவின் உண்மையான தற்சார்பு உணர்வைப் பிரதிபலிக்கின்றன. இதன்மூலம், இந்தத் தொழிலில் உள்ள பட்டியலினத்தவர், பழங்குடியினத்தவர், இதர பிற்படுத்தப்பட்டவர் மிகப் பெரியளவில் பலன் அடைவர் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டம் குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பிரதமரின் விஸ்வகர்மா கௌஷல் சம்மான் திட்டத்தில் நிதியுதவி மட்டுமின்றி, மேம்பட்ட திறன் பயிற்சிக்கான அணுகல், திறமையான பசுமை தொழில்நுட்பம், நவீன எண்ம தொழில்நுட்ப அறிவுகள், சந்தைப்படுத்துதல், உள்ளூர்-சர்வதேச சந்தைக்கான இணைப்பு போன்றவையும் அளிக்கப்பட உள்ளன' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற திட்டம் தற்போது உத்தர பிரதேச மாநிலத்தில் 'விஸ்வகர்மா ஷ்ரம் சம்மான் யோஜனா' என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ளது. பாரம்பரிய கைவினைஞர்கள் மற்றும் கைவினை தொழிலாளர்களான தச்சர்கள், தையல்காரர்கள், நெசவாளர்கள், கூடை நெய்பவர்கள் முதல் காலணி தொழிலாளர்கள் வரை சிறு தொழில் செய்ய ரூ.10,000 முதல் ரூ.10 லட்சம் வரை நிதியுதவி அளிக்கும் திட்டம் உத்தர பிரதேசத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**



77–ஆவது சுதந்திர தினத்தையொட்டி, சென்னை தலைமைச் செயலக முகப்பில் செவ்வாய்க்கிழமை தேசியக் கொடியேற்றி வைத்து மரியாதை செலுத்திய முதல்வர் மு.க.ஸ்டாலின்.

# 55,000 காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, ஆக. 15:** நிகழாண்டில் அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள 55,000 காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். மேலும், உணவு உள்ளிட்ட சேவைகளை வீடுகளுக்கே சென்று அளிக்கும் சேவை வழங்குநர்களுக்கென தனியாக நல வாரியம் உருவாக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

77-ஆவது சுதந்திர தினத்தையொட்டி, தலைமைச் செயலக முகப்பில் தேசியக் கொடியை முதல்வர் மு.க.ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை ஏற்றினார்.

இதைத் தொடர்ந்து, தலைமைச் செயலக முகப்பில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் நின்றபடி, மக்களுக்கு அவர் நிகழ்த்திய உரை:-

**55 ஆயிரம் காலியிடங்கள்:** அரசு ஊழியர்களின் பணிச் சுமையைக் கருத்தில் கொண்டு நிகழாண்டில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த சுமார் 55 ஆயிரம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

**சேவைகள் வழங்குநர்கள் நல வாரியம்:** சென்னை போன்ற பெருநகரங்களில் தொடங்கி பல்வேறு நகரங்களிலும் உணவு மற்றும் பல சரக்கு உள்ளிட்ட பொருள்களை வீடுகளுக்கே கொண்டு சேர்க்கும் பணியில் தனியார் நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

அத்தகைய நிறுவனங்களில் பணியாற்றும் சேவை வழங்குநர்களின் ஒட்டுமொத்த நலன்களைக் காக்கும் வகையில் அவர்களுக்கென தனியாக நல வாரியம் உருவாக்கப்படும்.

**ஓய்வூதியம் உயர்வு:** இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் 195 பேருக்கு மாதந்தோறும் தியாகிகளுக்கான நிதி கொடையை தமிழக அரசு வழங்கி வருகிறது. கடந்த ஆண்டு தியாகிகளுக்கான ஓய்வூதியம் ரூ.18 ஆயிரத்தில் இருந்து 20 ஆயிரமாகவும், குடும்ப ஓய்வூதியம் ரூ.9 ஆயிரத்தில் இருந்து ரூ.10 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டது. இந்த ஆண்டில் இருந்து குடும்ப ஓய்வூதியமானது, ரூ.10 ஆயிரத்தில் இருந்து ரூ.11 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்றார் முதல்வர் ஸ்டாலின்.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# அடுத்த 5 ஆண்டுகால வளர்ச்சியால் 1,000 ஆண்டுகளுக்குப் பலன்

**புது தில்லி, ஆக. 15:** 'வளர்ச்சியின் பொற்காலமான' அடுத்த 5 ஆண்டுகளில் நாடு அடையும் முன்னேற்றமானது, 1,000 ஆண்டுகளுக்குப் பலனளிக்கும் என தில்லி செங்கோட்டையில் தொடர்ந்து 10-ஆவது முறையாக நிகழ்த்திய சுதந்திர தின உரையில் பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

இளைஞர்களின் திறன், ஜனநாயகம், பன்முகத்தன்மை ஆகிய மூன்றுமே இந்தியர்களின் கனவை நனவாக்குவதற்கான முக்கிய ஆயுதங்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் 77-ஆவது சுதந்திர தினம் நாடு முழுவதும் செவ்வாய்க்கிழமை கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. தில்லி செங்கோட்டையில் நடைபெற்ற விழாவில் பிரதமர் மோடி தொடர்ந்து 10-ஆவது முறையாக தேசியக் கொடியை ஏற்றினார். அதையடுத்து, 'என் குடும்ப உறுப்பினர்களே' எனக் கூறி உரையைத் தொடங்கிய அவர் நாட்டு மக்களிடம் கூறியதாவது:

நாடு சுதந்திர நூற்றாண்டைக் கொண்டாடவுள்ள 2047-ஆம் ஆண்டில் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மக்களின் வலிமையால் அந்த இலக்கு நிச்சயம் எட்டப்படும். அந்த இலக்கை அடைய அடுத்த 5 ஆண்டுகள் மிக முக்கியமானவை. அந்த 5 ஆண்டுகளும் வளர்ச்சியின் பொற்காலமாக அமையும். அந்தக் காலகட்டத்தில் நாடு அடையும் வளர்ச்சி அடுத்த 1,000 ஆண்டுகளுக்குப் பலனளிப்பதாக அமையும்.

**கண்ணோட்டத்தில் மாற்றம்:** கடந்த 2014-ஆம் ஆண்டில் உலகின் 10-ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியா இருந்தது. மக்களின் வலிமை, அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றால் தற்போது 5-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளுக்குள் உலகின் 3-ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுக்கும் என உறுதி அளிக்கிறேன்.

மக்கள்தொகை அடிப்படையிலான இளைஞர்களின் பொருளாதாரத் திறன், ஜனநாயகம், பன்முகத்தன்மை ஆகியவை இந்தியர்களின் கனவை நனவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன. இந்தியாவின் வளர்ச்சி சர்வதேச அளவில் நிலையான வளர்ச்சியைத் தொடர்ந்து ஊக்குவிக்கும். இந்தியா மீதான சர்வதேச கண்ணோட்டம் பெருமளவில் மாறியுள்ளது. இந்தியா மீதான உலக நாடுகளின் நம்பிக்கை அதிகரித்துள்ளது. அந்த வாய்ப்பை நாம் நழுவவிடக்கூடாது.

**வளர்ச்சிக்கான எதிரிகள்:** நாட்டின் செயல்பாட்டில் ஊழல் மிகப் பெரும் பிரச்னையாக உள்ளது. அதற்கு எதிராக வாழ்நாள் முழுவதும் போராடுவேன். அனைத்துத் துறைகளிலும் குடும்ப உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவது மற்றவர்களுக்கான உரிமைகளைப் பறித்து வருகிறது. வாக்கு வங்கி அரசியலைக் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் ஆதரவாக நடந்து கொள்வது சமூக நீதியை பாதித்து வருகிறது. அவை நாட்டின் வளர்ச்சிக்கான மிகப் பெரிய எதிரிகளாக உள்ளன.

எதிர்க்கட்சிகள் கடைப்பிடித்து வரும் ஊழல், குடும்ப அரசியல் உள்ளிட்டவற்றுக்கு மக்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.





சுதந்திர தின நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த மாணவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி.

பாஜக தலைமையிலான மத்திய அரசின் கீழ் நவீன இந்தியா உருவாகி வருகிறது. கடந்த 9 ஆண்டுகளில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை பாஜக அரசு புகுத்தியது. மத்திய அரசின் நலத்திட்டங்களைப் போலியாக அனுபவித்து வந்த 9 கோடி பேர் களையப்பட்டனர். ஊழல்வாதிகளிடமிருந்து பறிமுதல் செய்யப்படும் சொத்துகளின் மதிப்பு 20 மடங்கு அதிகரித்துள்ளது. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அவற்றை வரும் ஆண்டுகளில் நானே தொடங்கி வைப்பேன் என நம்புகிறேன்.

**சர்வதேச மாற்றம்:** இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சர்வதேச செயல்பாடுகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. கரோனா தொற்று பரவலுக்குப் பிறகும் அதேபோன்ற மாற்றம் வேகமாக ஏற்பட்டு வருகிறது. அந்த மாற்றத்தை 140 கோடி இந்தியர்களும் முன்னின்று வடிவமைத்து வருகின்றனர். உலகின் மிகப் பெரும் திருப்புமுனையாக இந்தியா திகழ்ந்து வருகிறது.

நாட்டின் புத்தொழில்முனைவோரும், மகளிரும், விவசாயிகளும் கடினமாக உழைத்து வருகின்றனர். முக்கிய நகரங்களில் மட்டுமல்லாமல் இரண்டாம், மூன்றாம் நிலை நகரங்களிலும், கிராமங்களிலும் கூட வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை இளைஞர்கள் திறம்படப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**மணிப்பூரில் அமைதி:** மணிப்பூரில் கடந்த சில வாரங்களாக நிகழ்ந்து வரும் வன்முறைச் சம்பவங்கள் காரணமாக பலர் உயிரிழந்தனர்; பெண்கள் பலர் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஆனால், கடந்த சில நாள்களாக மணிப்பூரில் அமைதி திரும்பி வருகிறது. மணிப்பூருக்கு நாடே ஆதரவாக நிற்கிறது. அந்த அமைதி நீடித்து நிலைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

உக்ரைன் போர் உள்ளிட்ட சர்வதேச சூழல் காரணமாக பணவீக்கம் தொடர்ந்து அதிகமாக உள்ளது. அதனால், ஏழை மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி அதிகரிக்கும்போது, பணவீக்கமும் அதிகரிக்கிறது.

**'நாடே என் குடும்பம்':** சாதாரண குடிமக்களில் ஒருவனாக இருந்து நான் இங்கு வந்துள்ளேன். நாட்டு மக்களுக்காகவே தொடர்ந்து வாழ்ந்து வருகிறேன். என் கனவுகளும், செயல்பாடுகளும் நாட்டு மக்களை மையப்படுத்தியே இருக்கும். எனக்கு 'பிரதமர்' என்ற பொறுப்பை வழங்கியதால் மட்டுமே, அவற்றையெல்லாம் நான் செய்யவில்லை. நாட்டு மக்கள் அனைவரும் என் குடும்ப உறுப்பினர்கள் என்பதாலேயே அவர்களுக்காகத் தொடர்ந்து பணியாற்றுகிறேன். தேசத்தின் நலனை முன்னிறுத்தி தொடர்ந்து பணியாற்றுவேன்.

மாற்றத்தை முன்வைத்த வாக்குறுதியால் கடந்த 2014-ஆம் ஆண்டு பாஜக அரசுக்கு மக்கள் வாய்ப்பளித்தனர். 2019-ஆம் ஆண்டில் அதே நம்பிக்கையை மக்கள் மீண்டும் பாஜக மீது வைத்தனர். அடுத்த ஆண்டு சுதந்திர தினத்தின்போதும், நாட்டின் வளர்ச்சிப் பாதை குறித்து அதிக நம்பிக்கையுடன் தில்லி செங்கோட்டையில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றுவேன் என்றார் பிரதமர் மோடி.

**உச்சநீதிமன்றத்துக்கு பாராட்டு:** முன்னதாக தனது உரையில் பிரதமர் மோடி, 'தீர்ப்புகளின் முக்கிய அம்ச பகுதியை மாநில மொழிகளில் உச்சநீதிமன்றம் மொழி பெயர்த்து அளிப்பது பாராட்டத்தக்கது' என்றார். அப்போது, விழாவில் பங்கேற்றிருந்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் அமர்ந்திருந்த இடத்திலிருந்து பிரதமருக்கு நன்றி தெரிவித்தார்.

### ஒன்றரை மணி நேர உரை

தில்லி செங்கோட்டையில் பிரதமர் மோடி சுமார் 90 நிமிஷங்கள் (ஒன்றரை மணி நேரம்) உரையாற்றினார். நாட்டு மக்களை 'குடும்ப உறுப்பினர்களே' எனப் பலமுறை அவர் குறிப்பிட்டார். கடந்த 2016-இல் அதிகபட்சமாக 96 நிமிஷங்களுக்கும், 2017-இல் குறைந்தபட்சமாக 56 நிமிஷங்களுக்கும் அவர் உரையாற்றி இருந்தார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலுக்கு முன்பு நடைபெறும் சுதந்திர தின விழா என்பதால், பிரதமர் மோடியின் உரை மீதான எதிர்பார்ப்பு அதிகமாகவே இருந்தது. எனினும், முந்தைய உரைகளைப் போல முக்கிய திட்டங்கள் எதையும் புதிதாக அவர் அறிவிக்கவில்லை. கடந்த 9 ஆண்டுகால பாஜக அரசின் சாதனைகள், எதிர்காலத்துக்கான இலக்குகள் உள்ளிட்டவற்றை மையப்படுத்தியே அவரது உரை அமைந்தது.

# மகளிர் கட்டணமில்லா பேருந்து சேவை இனி 'விடியல் பயணம்' என அழைக்கப்படும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, ஆக.15:** மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணம் இனி மேல் 'விடியல் பயணம்' என்று அழைக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

சுதந்திர தின விழாவையொட்டி, சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள கோட்டை முகப்பில் செவ்வாய்க்கிழமை தேசியக் கொடியேற்றி வைத்து முதல்வர் ஆற்றிய உரை:

**பல் துறை வளர்ச்சி:** கடந்த இரண்டாண்டு காலத்தில் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சி என்பது பல்துறை வளர்ச்சியாக அமைந்துள்ளது. அதனடிப்படையிலேயே, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, உயர்கல்வியை ஊக்குவிக்க புதுமைப் பெண் திட்டம் போன்றவை செயல்படுத்தப்படுகின்றன.

பள்ளி மாணவர்களுக்காக காலை உணவு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரும் கல்வியாண்டு முதல், 31 ஆயிரத்து 8 அரசுப் பள்ளிகளில் பயிலும் 15 லட்சத்து 75 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டம் வரும் 25-ஆம் தேதி முதல் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.



**முன்னாள் ராணுவத்தினர்:** மாணவர்களின் திறன்களை வளர்ப்பதற்காக, செயல்படுத்தப்படும் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ், கடந்த ஓராண்டில் மட்டும் 13 லட்சம் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் முன்னாள் ராணுவத்தினருக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது. முன்னாள் ராணுவத்தினர் 10 ஆயிரம் பேருக்கு ரூ.7 கோடி மதிப்பில் உரிய பயிற்சிகள் வழங்கி அவர்களது திறன்கள் மேம்படுத்தப்படும். அவர்கள் உரிய பணியில் அமரும் வரையில் தக்க உதவிகள் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மகளிர் ஆட்டோ வாங்குவதற்கென தலா ரூ.1 லட்சம் மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், 141 பேர் பயனடைந்துள்ள நிலையில், மேலும் 500 பேர் பயன்பெறத் தக்க அளவில் திட்டம் விரிவுபடுத்தப்படும். இந்தத் திட்டத்தில் மூன்றாம் பாலினத்தவர்களும் பயன்பெறுவர்.

**விடியல் பயணம்:** 'விடியல் தரப் போகிறோம்' எனக் கூறியே ஆட்சிக்கு வந்தோம். அதன் அடையாளமாக மகளிருக்கு கட்டணமில்லாத பேருந்து பயணத் திட்டத்தைச் செயல்படுத்தினோம்.

இந்தத் திட்டத்தின் கீழ், நாள்தோறும் சராசரியாக 50 லட்சம் முறை மகளிர் பயணிக்கின்றனர். இதுவரை இந்தத் திட்டத்தில் சுமார் 314 கோடி முறை பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தால் ஒவ்வொருவரும் மாதம் ரூ.850-க்கு மேல் சேமிக்க முடிவதாக பெண்கள் கூறுகிறார்கள். பெண்களுக்குப் பொருளாதார விடியலைக் அளித்ததன் அடையாளமாக, கட்டணமில்லாத பேருந்து பயணத் திட்டம் இனி 'விடியல் பயணம்' என்று அழைக்கப்படும்.

**'நீட்' அகற்றப்பட வேண்டும்:** இந்தியாவில் இணைந்துள்ள மாநிலங்கள் சுயாட்சி உரிமை கொண்டதாகச் செயல்படுவதே கூட்டாட்சி முறை என்று முன்னாள் முதல்வர்கள் அண்ணாவும், கருணாநிதியும் பேசி வந்தார்கள். மக்களுக்குத் நேரடித் தொடர்பு கொண்ட அனைத்தும் மாநிலப் பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். குறிப்பாக, கல்வி மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும். அதைச் செய்தால்தான் நீட் போன்ற கொடூரமான தேர்வு முறை முற்றிலுமாக அகற்றப்பட முடியும்.

**உண்மையான அஞ்சலி:** சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம், மதச்சார்பின்மை, ஒடுக்கப்பட்டோர் நலன் ஆகிய மிக உயர்ந்த கோட்பாடுகள் கொண்ட இந்தியாவை அமைப்பதுதான், இந்திய விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலி என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# நிலவுக்கு 100 கி.மீ. தொலைவில் சந்திரயான்–3

## இஸ்ரோ விஞ்ஞானிகள் ஆயத்தம்

**சென்னை, ஆக.15:** நிலவுக்கு அருகே 100 கிலோ மீட்டர் அணுக்கப் பாதைக்குள் சந்திரயான்–3 விண்கலத்தை செலுத்தும் முயற்சியை இஸ்ரோ விஞ்ஞானிகள் புதன்கிழமை (ஆக.16) முன்னெடுக்கவுள்ளனர்.

வெற்றிகரமாக அது செயல்படுத்தப்பட்ட பிறகு அடுத்த 7 நாள்களில் நிலவில் லேண்டர் கலன் தரையிறக்கப்படும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவின் தென் துருவத்துக்கு அருகே தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட சந்திரயான்–3 விண்கலம், நிலவின் சுற்றுப்பாதைக்குள் பயணித்து வருகிறது.

அதன் சுற்றுப்பாதை தொலைவை படிப்படியாக குறைத்து விண்கலத்தை மெதுவாக தரையிறக்குவதற்கான பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி தற்போது குறைந்தபட்சம் 150 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 177 கி.மீ. தொலைவும் கொண்ட நிலவின் நெருக்கமான பாதையில் விண்கலம் பயணித்து வருகிறது.

அதற்கு அடுத்தகட்டமாக நிலவின் தரைப்பகுதிக்கும், விண்கலத்துக்குமான தூரத்தை 100 கி.மீ. ஆக குறைக்கும் பணிகள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு முன்னெடுக்கப்படவுள்ளன.

அதைத் தொடர்ந்து உந்து கலனில் இருந்து லேண்டர் சாதனம் விடுவிக்கப்பட்டு, திட்டமிட்டபடி ஆகஸ்ட் 23–ஆம் தேதி நிலவில் அது தரையிறக்கப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

EVA STALIN ACADEMY

# திருச்சி – தாம்பரம் மாநகராட்சிகளுக்கு விருதுகள் அளிப்பு

**சென்னை, ஆக. 15:** சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருதுகள் திருச்சி, தாம்பரம் மாநகராட்சிகளுக்கு வழங்கப்பட்டன. சென்னை கோட்டை கொத்தளத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சுதந்திர தின விழாவின் போது, இந்த விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறந்த மண்டலங்களான தேர்வான 9-ஆவது மண்டலத்துக்கு முதல் பரிசாக ரூ.30 லட்சத்தையும், 5-ஆவது மண்டலத்துக்கு இரண்டாம் பரிசாக ரூ.20 லட்சத்தையும் முதல்வர் வழங்கினார்.

சிறந்த மாநகராட்சிகள் வரிசையில் முதலிடம் பிடித்த திருச்சிக்கு ரூ.50 லட்சம், இரண்டாம் இடம் பிடித்த தாம்பரத்துக்கு ரூ.30 லட்சத்துக்கான காசோலைகளை முதல்வர் அளித்தார். இதேபோன்று சிறந்த நகராட்சிகளாக முதல் மூன்று இடங்களை ராமேசுவரம் (ரூ.30 லட்சம்), திருத்துறைப்பூண்டி (ரூ.20 லட்சம்), மன்னார்குடி (ரூ.10 லட்சம்) ஆகியன பெற்றன.

**சிறந்த நகராட்சிகள்–பேரூராட்சிகள்:** அந்த நகராட்சிகளுக்கான பரிசுத் தொகைகளை காசோலைகளாக முதல்வர் வழங்கினார். சிறந்த பேரூராட்சிகள் வரிசையில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி (ரூ.20 லட்சம்), புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி (ரூ.10 லட்சம்), சேலம் மாவட்டம் வீரக்கல்புதூர் (ரூ.6 லட்சம்) ஆகியவற்றுக்கு பரிசுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

**முதல்வரின் காவல் பதக்கம்:** போதைப் பொருள் உற்பத்தி மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்புப் பணிக்கான தமிழக முதல்வரின் காவல் பதக்கம் 6 பேருக்கு வழங்கப்பட்டது. அதன்படி, மதுரை தெற்கு மண்டல ஐ.ஜி., அஸ்ரா கார்க், கோவை மாவட்ட புறநகர் காவல் கண்காணிப்பாளர் வெ.பத்ரிநாராயணன், தேனி மாவட்ட எஸ்.பி. டோங்கரே பிரவின் உமேஷ், கோவை மாவட்ட காவல் உதவி ஆணையர் மா.குணசேகரன், நாமக்கல் மாவட்ட காவல் உதவி ஆய்வாளர் க.முருகன், நாமக்கல் புதுச்சத்திரம் முதல் நிலை காவலர் இரா.குமார் ஆகியோருக்கு காவல் பதக்கங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

# பிரதமர் மோடி உரையின் முக்கிய கருத்துகள்




- என் குடும்ப உறுப்பினர்களாகிய நாட்டு மக்களுக்காகத் தொடர்ந்து அயராது உழைப்பேன்.
- முன்னெப்போதும் காணாத வளர்ச்சியை அடுத்த 5 ஆண்டுகளில் நாடு காணும்.
- 2047–க்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் இலக்குக்கு அடுத்த 5 ஆண்டுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.
- இலக்குகளை அடைய வேண்டுமானால், ஊழல், குடும்ப அரசியல் உள்ளிட்ட சமூக தீங்குகளுக்கு முடிவுகட்ட வேண்டும்.
- நாடு சுதந்திர நூற்றாண்டைக் கொண்டாடும் 2047–ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த இந்தியாவை பிரதிபலிக்கும் வகையில் மூவர்ணக் கொடி பட்டொளி வீசிப் பறக்கும்.
- கரோனா தொற்று பரவலுக்குப் பிறகான சர்வதேச மாற்றத்துக்கு 140 கோடி இந்தியர்களும் பெரும் திருப்புமுனையாகத் திகழ்கின்றனர்.
- இந்தியாவின் வளர்ச்சி உலகுக்கான வாய்ப்பாக மாறியுள்ளது.
- சர்வதேச பொருளாதாரம், உணவுப் பொருள்கள் விநியோகத்தில் இந்தியாவின் பங்களிப்பு நிலையான வளர்ச்சியை உறுதி செய்துள்ளது.
- நாட்டை வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமெனில் ஊழலை எந்தவிதத்திலும் மக்கள் சகித்துக் கொள்ளக் கூடாது.
- மக்களின் நம்பிக்கையைப் பெற்று அடுத்த ஆண்டு சுதந்திர தின விழாவின்போது தில்லி செங்கோட்டையில் இருந்து உரையாற்றுவேன்.

# உச்சநீதிமன்றம் விரிவாக்கம்: 27 புதிய அமர்வு அறைகள்

## தலைமை நீதிபதி அறிவிப்பு

**புது தில்லி, ஆக.15:** உச்சநீதிமன்றம் விரிவாக்கம்செய்யப்பட்டுகூடுதலாக 27 அமர்வு அறைகள், 4 நீதித்துறை பதிவாளர் அறைகள் அமைக்கப்படும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தெரிவித்தார். இதன் மூலம் நீதி அணுகலை எளிதாக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

உச்சநீதிமன்ற வழக்குரைஞர்கள் சங்கம் சார்பில் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திரதின விழாவில் பங்கேற்ற தலைமை நீதிபதி மேலும் பேசியதாவது:

நீதி பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண தொழில்நுட்பத்தின் முழுத் திறனையும் பயன்படுத்தி, நீதித் துறை நடைமுறைகள் அனைவருக்குமானதாகவும், குறைந்த நியாயமான கட்டணத்தில் மக்களுக்கு கிடைக்கச் செய்வதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

ஏனெனில், வரும் நாள்களில் நீதி அணுகல் மற்றும் சமூகத்தின் கடைசி நபர் வரை தடையற்ற நீதி கிடைப்பதை உறுதிப்படுத்துவதிலும் உள்ள



தடைகளை நீக்குவதே நீதித்துறைக்கான மிகப் பெரிய சவாலாக இருக்கும்.

அவ்வாறு நீதி அணுகலை எளிதாக்க, நமது ஒட்டுமொத்த நீதிமன்ற உள்கட்டமைப்புகளை முன்னுரிமை அடிப்படையில் மேம்படுத்துவது அவசியம். அதன் ஒரு பகுதியாக, உச்சநீதிமன்றத்தில் கூடுதலாக 27 நீதிமன்றங்கள், 4 நீதித்துறை பதிவாளர் அறைகள், வழக்குரைஞர்கள் மற்றும் மனுதாரர்களுக்கான புதிய கட்டட வசதிகளுடன் உச்சநீதிமன்றத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் கட்ட விரிவாக்கத்தில் 15 புதிய அமர்வு அறைகளும், இரண்டாம் கட்டத்தில் 12 அமர்வு அறைகளும் இடம்பெறும்.

நீதி நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் முயற்சியின் ஒரு பகுதியாக, வழக்கு விசாரணைகளை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான முயற்சிகளையும் உச்சநீதிமன்றம் மேற்கொண்டு வருகிறது.

உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் மீதான பரிசீலனை தாமதமாவதாக கூறப்படும் புகாரைப் போக்க தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**3 மாதங்களில் 19,000 வழக்குகளில் தீர்வு:** கடந்த மார்ச் முதல் ஜூன் மாதத்துக்கு இடைப்பட்ட காலத்தில் 19,000 வழக்குகளில் தீர்வு அளிக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதத்தில் மட்டும் 4,527 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், 4,086 வழக்குகளுக்கு தீர்வு அளிக்கப்பட்டது. ஏப்ரல் மாதத்தில் 4,716 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், 4,700 வழக்குகள் தீர்வளித்து முடித்து வைக்கப்பட்டன.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நீதித்துறைதிறனைமேம்படுத்துவதே உச்சநீதிமன்றத்தின் எதிர்கால நோக்கமாக உள்ளது என்று தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் கூறினார்.

### மாநில மொழிகளில் 9,423 தீர்ப்புகள்

உச்சநீதிமன்றத்தில் இதுவரை 9,423 தீர்ப்புகள் மாநில மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்று தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தெரிவித்தார்.

இதில், ஹிந்தி, அஸ்ஸாமி, பெங்காலி, குஜராத்தி, கனடம், மலையாளம், மராத்தி, பஞ்சாபி, தமிழ் மற்றும் உருது மொழிகளில் 8,977 தீர்ப்புகள் அடங்கும். மேலும், 35,000 தீர்ப்புகளையும் மாநில மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

# கி.வீரமணிக்கு தகைசால் தமிழர் விருது: முதல்வர் வழங்கினார்





தமிழக அரசு சார்பில் சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சுதந்திர தின விழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணிக்கு 'தகைசால் தமிழர் விருதை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா உள்ளிட்டோர். (வலது) விழாவில் தமிழக அரசின் பல்வேறு விருதுகளைப் பெற்ற விருதாளர்களுடன் முதல்வர்.

**சென்னை, ஆக.15:** திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணிக்கு தகைசால் தமிழர் விருதை முதல்வர் மு.க.ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை வழங்கினார். மேலும், அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறந்த விளங்குவோருக்கான ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் விருது, வீரதீரச் செயல்புரிந்தோருக்கான கல்பனா சாவ்லா விருது ஆகியவற்றையும் அவர் வழங்கினார்.

நாட்டின் 77-ஆவது சுதந்திர தினக்கொண்டாட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. தமிழக அரசு சார்பில் தலைமைச் செயலக முகப்பில் நடைபெற்ற விழாவில், தேசியக் கொடியை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்றி வைத்து, விருதாளர்களுக்கு விருதுகளை அளித்தார்.

**தகைசால் தமிழர்:** அரசியல் உள்ளிட்ட பல்வேறு தளங்களில் மக்களுக்காக பங்களிப்புகளை வழங்கி வரும் முக்கிய தமிழர்களுக்கு தகைசால் தமிழர் விருது வழங்கப்பட்டு வருகிறது. நிகழாண்டு விருது திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணிக்கு அறிவிக்கப்பட்டது. இந்த விருதை சுதந்திர தின விழாவின்

## இரு பெண்களுக்கு கலாம், கல்பனா சாவ்லா விருதுகள் அளிப்பு

போது, முதல்வர் மு.க.ஸ்டாலினிடமிருந்து அவர் பெற்றுக் கொண்டார். இந்த விருது ரூ.10 லட்சம் காசோலை, பாராட்டுச் சான்றிதழ் அடங்கியது.

**கலாம்-கல்பனா சாவ்லா:** அறிவியல் தொழில்நுட்பம், துணிவு சாகசச் செயல் ஆகிய பிரிவுகளில் சிறப்பாகச் செயல்படுவோருக்கான விருதுகளையும் முதல்வர் அளித்தார்.

அதன்படி, வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் கணினித் துறை பேராசிரியரான டபிள்யூ.பி.வசந்தா கந்தசாமி, ஆசிரியர் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் 50 ஆண்டுகளாக அனுபவம் கொண்டவர். அவருக்கு ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் விருது அளிக்கப்பட்டது. இந்த விருது ரூ.5 லட்சம் காசோலை, 8 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழ் அடங்கியது.

செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த நா.முத்தமிழ்ச் செல்வி, எவரெஸ்ட் சிகரத்தில் (கடந்த மே 23-இல்) ஏறி சாதனை படைத்த தமிழகப் பெண்மணி என்பதால் அவருக்குவீரதீர செயலுக்கான கல்பனா சாவ்லா விருதை முதல்வர் வழங்கினார். இந்த விருது ரூ.5 லட்சம் காசோலை, தங்க முலாம் பூசப்பட்ட பதக்கம், சான்றிதழ் அடங்கியது.

இவர் பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை விழிப்புணர்வுக்காக, கண்களை மூடிக்கொண்டு தனது மகளை முதுகில் சுமந்து நூதன முறையில் மலை உச்சியில் இருந்து இறங்கினார். மேலும், குதிரை மீது அமர்ந்து அம்புகள் எய்தது போன்ற சில சாகச நிகழ்வுகளையும் நிகழ்த்தியுள்ளார். ஜப்பான் மொழிபெயர்ப்பாளராகவும் உள்ளார்.

**நல்லாளுமைவிருது:** முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட கண்காணிப்பை கைப்பேசி செயலி வழியாக கண்காணிக்கும் அமைப்பை உருவாக்கியதற்காக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு நல்லாளுமை விருது வழங்கப்பட்டது. இந்த விருதை முதல்வரிடமிருந்து மின் ஆளுமை முகமை இணை இயக்குநர் ரமண சரஸ்வதி பெற்றுக் கொண்டார். ஆதரவற்ற நோயாளிகளுக்கு உரிய சிகிச்சைகளை மேற்கொள்ள வழி செய்திட்ட சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை டீன் இ.தேரணி ராஜன், கோவை மாவட்டத்தில் அரசு பள்ளிக் குழந்தைகளுக்கு பாலியல் ரீதியான குற்றங்களுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக கோவை புறநகர் மாவட்ட எஸ்.பி. வெ.பத்ரிநாராயணன் ஆகியோருக்கு நல்லாளுமை விருதுகளை முதல்வர் வழங்கினார். இந்த விருது தலா ரூ.2 லட்சம் காசோலை, பாராட்டுச் சான்று அடங்கியது.

**மாற்றுத் திறனாளிகள் நலன் விருது:** மாற்றுத் திறனாளிகள் நலனில் கூடுதல் கவனம் செலுத்தி வரும் சென்னையைச் சேர்ந்த அரசு மறுவாழ்வு மருத்துவமனை இயக்குநர் த.ஜெயக்குமார், மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு பயிற்சிகளை அளித்து வரும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சாந்தி நிலையம் ஆகியோருக்கு விருதுகள் அளிக்கப்பட்டன.

சிறந்தசமூகப்பணியாளர்பிரிவில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ரத்தன் வித்யாகர், மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக வேலைவாய்ப்புகளுக்கு அளித்த சிறந்த தனியார் நிறுவனமாக மதுரையைச் சேர்ந்த டெடி எக்ஸ்போர்ட்ஸ், சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியாக ராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு வங்கி ஆகியன தேர்வு செய்யப்பட்டன. அவற்றுக்கும் விருதுகளை முதல்வர் வழங்கினார். இந்த விருது தலா 10 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழ் அடங்கியது.

**மகளிர் நலன் விருது:** கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சமூக சேவகர் டி.ஸ்டான்லி பீட்டர், கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலத்தில் உள்ள 'கிராமத்தின் ஒளி' என்ற தொண்டு நிறுவனம் ஆகியோர் மகளிர் நலனுக்காக பணியாற்றிய பிரிவில் விருதுகளைப் பெற்றனர். இந்த விருது தலா 10 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழைக் கொண்டது.

**இளைஞர் விருதுகள்:** பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொள்ளும் இளைஞர்களுக்கு முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது வழங்கப்படுகிறது. அதன்படி, ஆதரவற்றோர்களை மீட்பது, உடல்களை அடக்கம் செய்வது போன்ற பணிகளைச் செய்து வரும் நீலகிரி மாவட்டம் சி.தஸ்தகீர், சிறார் வன்கொடுமை குறித்து பிரசாரம் செய்து வரும் திருச்சி மாவட்டம் ரா.தினேஷ்குமார், ரத்த தானத்தை உயிர் மூச்சாகக் கொண்டு பணிபுரியும் ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கோ.கோபி, சாகச விளையாட்டுகள் மூலம் பிரபலமான செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ப.ராஜசேகர் ஆகியோர் ஆண்கள் பிரிவுக்கான மாநில இளைஞர் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

இதேபோன்று, பெண்கள் பிரிவிலும் விருதாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். ரத்த தான முகாம்களுக்கு ஏற்பாடு, குழந்தைத் திருமண தடுப்பு விழிப்புணர்வு போன்ற பணிகளைச் செய்து வரும் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த மு.விஜயலட்சுமி, கைவிடப்பட்ட குழந்தைகளை தத்தெடுப்பதற்கான பணிகளை மேற்கொள்ள வழி வகை செய்வது போன்ற பணிகளுக்காக மதுரை மாவட்டம் செ.சந்திரலேகா, இருளர் பழங்குடியினர் மேம்பாட்டுக்கு பணியாற்றி வரும் காஞ்சிபுரம் மாவட்டம் கவிதா தாந்தோனி ஆகியோர் பெண்கள் பிரிவில் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகளை வழங்கினார். இந்த விருதுகள் ரூ.1 லட்சம் காசோலையுடன், தலா 10 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழ் அடங்கியது.

**குழு புகைப்படம்:** தகைசால் தமிழர் விருது பெற்ற திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணியும், முதல்வர் மு.க.ஸ்டாலினும் தனியாக புகைப்படம் எடுத்துக் கொண்டனர். விருது பெற்றது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த வீரமணி, இந்த விருதை பெரியாருக்கு சமர்ப்பணம் செய்வதாகக் கூறினார். இதன்பிறகு, மற்ற விருதாளர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் குழு புகைப்படம் எடுத்தார்.